


**23. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

**1. மாணாக்கர் தங்களுடைய திறன்களால் எதிர்கால இந்தியாவிற்கு** வழிகோல முடியும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**2. தேச கட்டமைப்பில் விடுதலை போராட்ட வீரர் டாக்டர் ஷியாமா** பிரசாத் முகர்ஜியின் தன்னிகரற்ற பணி என்றென்றும் நினைவில் கொள்ளப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**3. தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலமாக தொழில் வணிகத்** துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பணியாளர்களுக்கு முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் நியமன ஆணைகளை இன்று வழங்கினார்.

4. **சிதம்பரம் நடராஜர் திருக்கோவில் ஆனி திருமஞ்சன விழா** இன்றுகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

5. **லீட்ஸில் இங்கிலாந்திற்கு எதிராக 96 ரன் முன்னிலை என்ற** நிலையில் இந்தியா தனது 2-வது இன்னிங்சை இன்று பிற்பகல் தொடர்ந்து விளையாடும்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**குடியரசுத்தலைவர்**

**குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவின்** உரைகள் அடங்கிய **Wings to Our Hopes** 2-வது தொகுப்பை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்றுமாலை புதுதில்லியில் வெளியிடுகிறார்.

குடியரசு தலைவரின் தொலைநோக்கு பார்வை, தத்துவம், உயர் முன்னுரிமை போன்றவற்றை வலியுறுத்தியுள்ள அவரது 51 உரைகளிலிருந்து இந்த தொகுப்பு வெளியிடப்படுகிறது.

ஹிந்தி, ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த பதிப்பின் மின்னணு தொகுப்பும் இடம்பெறுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் ஆகியோர் இதில் பங்கேற்கின்றனர்.

**முன்னதாக** குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லி விஞ்ஞான் பவனில் இந்திய பட்டயகணக்காளர்கள் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றுகையில் இந்நிறுவனத்தின் பாடத்திட்டங்கள் எதிர்கால இந்தியாவிற்கு பெரிதும் பயனளிக்கும் என்றார்.

மாணாக்கர் தத்தம் திறன்களால் எதிர்கால இந்தியாவிற்கு வழிகோல முடியும் என்று கூறியுள்ள அவர், வலுவான பொருளாதாரத்திற்கு இந்நிறுவனம் வகை செய்யும் என குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் முயற்சியில்** பாரதிய ஜன்ஷங் நிறுவனர் டாக்டர். ஷியாமா பிரசாத் முகர்ஜி அர்ப்பணிப்புடனும் துணிச்சலுடனும் செயலாற்றியதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

அன்னாரது 72-வது நினைவு தினத்தை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர், தேச கட்டமைப்பில் ஷியாம பிரசாத்தின் தன்னிகரற்ற பணியை நாடு என்றென்றும் நினைவு கூறும் என்றார்.

பி.ஜே.பி. தேசிய தலைவர் திரு. ஜே.பி.நட்டா புதுதில்லியில் கட்சியின் தலைமையகத்தில் டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜி சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் பேசிய திரு. ஜே.பி.நட்டா அன்னாரது நினைவாக நாடு முழுவதிலும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

சுதந்திர போராட்ட வீரரான டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி 1953-ம் ஆண்டு ஸ்ரீநகர் சிறையில் இருந்தபோது உயிரிழந்தார்.

❖❖❖❖❖❖

**போர் பதற்றம்**

**ஈரான் - இஸ்ரேல் நாடுகளிடையே பதற்றம்** தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் சர்வதேச சந்தைகளில் எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது.

ஈரான் மீதான இஸ்ரேல் தாக்குதலில் அமெரிக்காவும் இணைந்ததை தொடர்ந்து உலகின் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணெய் கப்பல்களின் வழித்தடமான **ஹார்மஸ் ஜலசந்தியை** மூட ஈரான் பாராளுமன்றம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

உலகளாவிய எண்ணெய் ஏற்றுமதியில் 20 சதவிகிதம் மற்றும் பெரும்பகுதி இயற்கை எரிவாயு கப்பல்கள் **ஹார்மஸ் ஜலசந்தி மூலம்** பயணிப்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானிய அணுசக்தி நிலைகளின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இது கருதப்படுகிறது. அமெரிக்க ராணுவ படைகளும் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. **அப்பாஸ் அராக்ச்சி** பேச்சுவார்த்தைகளுக்காக இன்று மாஸ்கோ சென்றுள்ளார்.

இந்நிலையில் ஈரான் அரசியலில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சூசகமாக தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

**தேர்தல்**

**குஜராத், மேற்குவங்கம், பஞ்சாப், கேரளம் ஆகிய** 4 மாநிலங்களின் 5 சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறும் நிலையில்

குஜராத் மாநிலம் காடி சட்டப்பேரவை தொகுதியில் பி.ஜே.பியும்

விசவதாரில் ஆம்ஆத்மி கட்சியும் முன்னிலையில் உள்ளன.

மேற்கு வங்கத்தில் திரிணமுல் காங்கிரஸ்,

பஞ்சாபில் ஆம் ஆத்மி

கேரளத்தில் காங்கிரஸ் கட்சிகள் முன்னிலை வகிக்கின்றன.

❖❖❖❖❖❖

**பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசின் 11 ஆண்டுகால செய்தித்தொகுப்பு ...**

**இந்தியா கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக** பல்துறைகளில் மேம்பாடு கண்டுவரும் நிலையில் நாட்டின் சிறுபான்மையின சமூகத்தினர் உள்ளடக்கிய வளர்ச்சி, ஆளுமை, வாய்ப்புகள், அரசின் சீர்த்திருத்தங்களுடன் முன்னேற்றப்பாதையில் பயணிக்கின்றனர்.

கல்வி, பொருளாதார ஆளுமை, கட்டமைப்பு மேம்பாடு போன்றவற்றின் மூலம் சிறுபான்மையின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உயர்முன்னுரிமை வழங்கப்படுகிறது.

பிரதமரின் **ஜன் விகாஸ் காரியக்ரம்** என்ற சிறுபான்மையினர் மேம்பாட்டு திட்டத்திற்காக 18 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுபான்மையின மேம்பாடு மற்றும் நிதிக்கழகம் மூலம் ஒருலட்சத்து 74 ஆயிரம் பயனாளிகளுக்கு, 752 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஹஜ் சுவிதா செயலி மூலம் ஹஜ் பயனாளிகளின் நலன்களை உறுதி செய்துள்ள அரசு வெளிப்படைத்தன்மை, ஆளுமையை வலுப்படுத்தும் வகையில் வக்ஃப் திருத்த சட்டம் 2025-ஐ கொண்டுவந்தது.

வக்ஃப் சொத்துக்களின் மின்னணு மேலாண்மைக்கு வகை செய்யும் விதத்தில் **Ummed** இணையதளமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

புத்த மேம்பாட்டுத்திட்டம் போன்றவை பல்வேறு சமயத்தினரின் தேவைகளை அரசு பூர்த்தி செய்ததோடு அவர்களது கலாச்சாரத்தை பாதுகாத்ததோடு, கல்வியில் மேம்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

அர்ப்பணிப்புமிகு திட்டங்கள், கல்வி உதவித் தொகை, மின்னணு சீர்த்திருத்தங்கள், கலாச்சார பராமரிப்பு போன்றவற்றின் மூலம் ஆளுமையை உறுதிசெய்து நிலையான உள்ளடக்கத்திற்கு மத்திய அரசு வகை செய்துள்ளது.

இந்த உள்ளடக்கம் ஒரு கொள்கையாக இல்லாமல், உறுதிமொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலமாக** தொழில் வணிகத்துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பணியாளர்களுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று நியமன ஆணைகளை வழங்கினார்.

❖❖❖❖❖❖

**உதயநிதி ஸ்டாலின்**

சென்னை சேப்பாக்கத்தில் 8 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்ததுடன், ராயப்பேட்டையில் 9 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கும் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

புலித்தோப்பு பகுதியில் ஒருகோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஆரம்ப பள்ளி கட்டடம்

தேனாம்பேட்டை லாக் நகரில் ஒருகோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டடம் ஆகியவற்றை திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ்**

**சென்னையில் மாநில பள்ளிக்கல்வித்துறை** அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் கல்வி ஆய்வுக்குழு கூட்டம் இன்று நடைபெற்றது.

தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழக மேலாண் இயக்குநர் திரு. சங்கர், பள்ளி கல்வி இயக்குநர் முனைவர் கண்ணப்பன் உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் கன்னியாகுமரி, மயிலாடுதுறை உள்ளிட்ட 13 மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளி கல்வித்துறையின் செயல்பாடுகள் மாணாக்கருக்கான மேம்பட்ட நலத்திட்டங்கள் ஆகியவை குறித்து இதில் ஆய்வு செய்யப்பட்டது.

❖❖❖❖❖❖

**ரகுபதி**

**புதுக்கோட்டை** மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பாதுகாப்பு தொடர்பான முகாமை மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. ரகுபதி இன்று தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் வேளாண் இயந்திரங்களின் திறன்மிகு மற்றும் பராமரிப்பு குறித்து விழிப்புணர்பு ஏற்படுத்தப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் மு. அருணா தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

**இருவரி**

**கார்கில் போர் வெற்றி தினம் வரும் 26-ம் தேதி** கொண்டாடப்படவுள்ள நிலையில் இப்போரில் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு வேலூர் அணைக்கட்டு அருகே கன்னிகாபுரத்தில் இன்று மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இவ்வீரர்களின் குடும்பத்தினருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று** நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர் வாகனத்தை ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் இரண்டு பேருக்கு இன்று வழங்கினார்.

மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் 12 பேருக்கும் வழங்கினார்.

**சிவகங்கை மாவட்டத்தில் மீன்வளர்ப்பு** விவசாயிகள் மானியம் பெற, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் பதிவுசெய்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖

**தென்காசி வாய்ஸ்**

**மேற்கு தொடர்ச்சி** மலைப்பகுதிகளில் அண்மை மழையால் நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் தென்காசியில் கார் சாகுபடி முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**நாகை வாய்ஸ்**

**நாகை மாவட்டம் கோடியக்கரை கடற்கரையில்** இலங்கை நாட்டை சேர்ந்த ∴பைபர் படகு கரை ஒதுங்கிய நிலையில் வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழு காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

❖❖❖❖❖❖

**கோவில்**

**சிதம்பரம் நடராஜர் திருக்கோவில் ஆனி** திருமஞ்சன விழா இன்றுகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்வான தேர்திருவிழா வரும் ஒன்றாம் தேதியும், ஆனி திருமஞ்சனம் 2-ம் தேதியும் நடைபெறும்.

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி** திருக்கோவில் குடமுழுக்கு விழா வரும் 7-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், யாகசாலை பணிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**லீட்ஸில் இங்கிலாந்திற்கு எதிரான முதல் டெஸ்ட்** கிரிக்கெட் போட்டியின் நேற்றைய 3-ம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா தனது 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்பிற்கு 90 ரன் எடுத்திருந்தது.

கே.எல். ராகுலும், ஷுப்மான்கில்லும் களத்தில் உள்ளனர்.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

இங்கிலாந்து 465 இந்தியா 471

இந்தியா தற்போது 96 ரன் முன்னிலையில் உள்ளது

4-ம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖